


# 12வது ஞானச்சாரியார்

## ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர்

## அவர்களின் எழுத்துக்கள்





11வது ஞானச்சாரியார்

12வது ஞானச்சாரியார்

மாசி மாத வெளியீடு

பதினெண்சித்தர்கள் வகுத்தளித்த மெய்யான இந்துமத ஆண்டு 43,73,113

உள்ளுறைத் தலைப்புக்கள்


## 1. யமுனையாற்றங்கரைப் பாரதப் போரும், காவிரியாற்றங்கரைப் பாரதப் போரும் -

***இந்தியாவில் புரட்சி ஏன்? எப்போது? எப்படி?***

11வது ஞானச்சாரியாரின் வாக்கியங்கள் (கி.பி.10ஆம் நூற்றாண்டில் வழங்கப்பட்டது)

## 2. மதுரையின் அழிவு

**கி.பி. முதலாம் நூற்றாண்டில் மதுரை அன்னியப் படையெடுப்பினால் அழிந்த பின்பே தமிழர்களின் தாழ்ச்சி நிலை தொடங்கித் தொடர ஆரம்பித்தது. சித்தர் ஏளனம்பட்டியார் 20ஆம் நூற்றாண்டுத் துவக்கத்தில் எழுதிய குறிப்பு.**

## 3. என்றைக்குமுரிய அரசபாரம்பரியம்

**முதலாம் விசயாலயச் சோழனுக்கு வழங்கப்பட்ட செயல்திட்ட அறிவுரைகள். (கி.பி. 8ஆம் நூற்றாண்டில் எழுதப் பட்டது)**



www.gurudevar.org
Email: indhuism@gmail.com
Cell: 9972130609


**தமிழ்மொழிப் பற்றும், தமிழர் நெறியான இந்துமதப் பற்றும் உள்ளவர்களுக்கு அனுப்பப்படும் சுற்றறிக்கை. இதை நகலெடுத்துத் தமிழ் தெரிந்த அனைவருக்கும் படிக்கக் கொடுக்கவும்.**

# இந்தியாவில் புரட்சி ஏன்? எப்போது? எப்படி?

## யமுனை ஆற்றங்கரை மகாபாரதப் போரும் காவிரி ஆற்றங்கரை மகாபாரதப் போரும்

**சித்தர் ஏனனம்பட்டியார் அவர்களின் முன்னுரை:-**

தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய ஞானச்சாரியார், இந்துமதத் தந்தை, குவலய குருபீடம், பதினோராவது பதினெண் சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் அவர்கள் வைகாசித் திங்கள் ஞானம் வழங்கு பருவபூசை விழாவை யொட்டி இரா.இரா. முத்திரைக் கோட்டையில் நிகழ்த்திய உரையில் கூறிய கருத்துக்கள் முதலமைச்சர் அநிருத்தப் பிறமராயரும், அரசின் தலைமைச் சேனாதிபதி வந்தியத் தேவரும், சமயநல்லூர்ப் பெரிய வேளாரும், சமயபுரம் பெரிய வேளாரும், இவரது மகன் மாரிமுத்து வேளாரும்.... மற்றும் அன்றைய தமிழ்ப் புலவர்களும், இந்து மதம் காத்து வளர்த்த சித்தரடியான்கள், சித்தரடியாள்கள், சித்தரடியார்கள் அவரவர் வாழ்வியல்களில் நாட்டு நடப்பில் எடுத்துக் கூறியும், ஏட்டில் எடுத்தெழுதியும் நிலைபேறு பெறச் செய்தவையே ஆகும். அதாவது, மேலே தலைப்பாகக் குறிப்பிடப்பட்டிருக்கும் சொற்றொடர் இன்றைக்கும் பிற்காலச் சோழநாட்டின் பகுதியாக விளங்கும் தஞ்சை மாவட்டம், திருச்சி மாவட்டம் எனும் இருபெரும் மாவட்டங்களில் பெரும்பாலான கிராமத்து மக்களிடையில் வழக்காற்றில் வாழுகிறது. பாண்டிய நாட்டில் மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த சோழவந்தான் வட்டம், பெரியகுளம் வட்டம், இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த மாணிக்கவாசகரின் உத்தரகோசமங்கை வட்டாரம் முதலிய பகுதிகளில் தலைப்பிலிடப்பட்ட சொற்றொடர் வழக்காற்றில் உள்ளது.

ஞானச்சாரியார் பங்குனித் திங்களில் நிலவறைக்குள் போவதற்கு முன் வைகாசித் திங்களில் ஞானம் வழங்கு பருவபூசையைப் பிற்காலச் சோழப் பேரரசோடு நேரடியாகப் போரிடுவதற்காக அருட்படை திரட்டிப் போரில் ஈடுபட ஆயத்தம் செய்த காலத்தில் இரா.இரா.முத்திரைக் கோட்டையில் நிகழ்த்திய ஆய்வு மன்றக் காலங்களில் வழங்கிய உரைகளில் குறிக்கப்பட்ட கருத்துக்களும், செய்திகளும், நிகழ்ச்சிகளும் கணக்கற்றவை. அவற்றுள் ஒன்றுதான் மேலே குறிப்பிடும் யமுனை ஆற்றங்கரையில் மகாபாரதமும், காவிரி ஆற்றங்கரையில் மகாபாரதமும் என்ற தலைப்பில் கூறப்பட்டவை. எனவேதான், இச்சொற்றடர் நிலையான வாழ்வைப் பெற்றிருக்கிறது. இவற்றை இந்தக் காலக் கட்டத்தில் உள்ள இந்துமதத்தவர்களும், இந்துமதத்தின் மூலவர்களாகவும் காவலர்களாகவும் உள்ள தமிழினத்தவர்களும், இந்துமதத்துக்குரிய அண்டபேரண்ட அருளுலக ஆட்சிமொழியான அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியின் பற்றாளர்களும், பதினெண் சித்தர்களுடைய சித்தர் நெறியெனும் சீவநெறியான மெய்யான இந்து மதம் பிறந்திட்ட கடலுள் மறைந்த இளமுறியாக் கண்டமெனும் குமரிக் கண்டத்தின் மிஞ்சியிருக்கும் பகுதிகளிலேயே மிகப் பெரியதான கடவுளர் வாழும், கடவுளர் நாடான தமிழகத்தில் வாழுபவர்களும் தெரிந்து கொண்டேயாக வேண்டும். இந்த எண்ணத்தில்தான் சித்தர் கருவூரர் வழிவந்த கண்டப்பக் கோட்டைச் சித்தர் ஏனனம் பட்டியாராகிய யாம் இந்த ஒரு சிறு கட்டுரையைப் பல படிவங்கள் எடுத்து எம்மாலியன்ற வரை அனைவருக்கும் அனுப்பி வருகின்றோம். இக்கட்டுரை

தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய பதினோராவது பதினெண் சித்தர் பீடாதிபதி குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்களுடைய வாக்கின் இயல்பாகவே [வாக்கு+இயல்பு = வாக்கு + இயம் ண்ற> வாக்கியம்] வழங்கப்படுகின்றது.

**தஞ்சைக் காவிரியாற்றங்கரைக் கருவூரரின் வாக்கியங்கள்:-**

“நடக்க இருக்கும் அருட்போர் சென்ற யுகத்தின் இறுதியில் நடந்த மகாபாரதப் போரை விட மிகப் பெரிய அழிவையும், இழப்புகளையும் நல்கியே தீரும். யமுனைக் கரையில் நடந்த மகாபாரதப் போரையும், காவிரிக் கரையில் இப்பொழுது நடக்கப் போகின்ற மகாபாரதப் போரையும் ஒப்பிட்டு எண்ணிப் பார்த்தே ஆக வேண்டிய அவசியம் ஏற்பட்டு விட்டது.

**சந்திரகுல அரசபரம்பரை:-**

பஃறுளியாற்றங்கரையில் பிறந்த சந்திரகுலத்துப் பாண்டிய அரசு ஞானச்சாரியாரான சித்தர் கருவூரர்களின் சந்திர குலத்துக்குரிய குருகுல அரச பாரம்பரியமாகவே எங்கும் பரவிற்று. ஆனால், அது அடுத்து தாமிரபரணியாற்றங் கரையிலும், வைகையாற்றங் கரையிலும், யமுனையாற்றங் கரையிலுமே தமிழினத்தவர்களின் குருகுல அரச பாரம்பரியமாக வளர முடிந்தது. மற்றபடி, இதே குருகுலத்துக்குரிய பாண்டிய அரச பாரம்பரியம் சந்திர குலத்து உணர்வோடும், செயலோடும் இம்மண்ணுலகின் பல பகுதிகளில் வேரூன்றி முளைத்துக் கிளைத்துச் செழித்து வளர்ந்த போதிலும், அந்த அரசகுலத்தார்கள் தென் இமயம் முதல் வடவேங்கடம் வரை பரவியிருந்த இந்து மத நாட்டுடனோ அல்லது தென்குமரி முதல் வட இமயம் வரை நிலைத்திருக்கும் இந்து மத நாட்டுடனோ அதிகமாகத் தொடர்பு வைத்துக் கொள்ளாதவர்களாகி விட்டனர். அதனால்தான் உலகந் தழுவிய தமிழின அரச பரம்பரையினர் நிலைத்த நெருங்கிய உறவுமுறைகளை உண்டாக்கிக் கொள்ள முடியவில்லை.

**சூரியகுல அரசபரம்பரை:-**

ஆனால், இளமுறியாக் கண்டத்துக் குமரியாற்றங்கரையில் முதல் பதினெண் சித்தர் பீடாதிபதியான சித்தர் அனாதிக் கருவூரர் அவர்களின் மகள் சோழமாதேவியின் வழியாகத் தோற்றுவிக்கப்பட்ட சூரியகுலச் சோழ அரசபரம்பரையினர் குமரியாற்றங்கரையிலேயே தங்களுடைய முதல் சோழப் பேரரசை அமைத்த போதிலும், இம்மண்ணுலகம் முழுவதும் தங்களுடைய சூரிய குலச் சோழ அரசபரம்பரையை (Sun Dynasty) நன்கு வேரூன்றச் செய்து விட்டார்கள். எனவேதான், உலகம் முழுதும் பதினெண் சித்தர்களுடைய மெய்யான இந்துமதம் தன்னுடைய இலிங்கம், சிவலிங்கம், சத்திலிங்கம், தேவகுமாரன் முருகன், நந்திதேவர், பிள்ளையார், கணபதி, விநாயகர் முதலிய அனைவரையுமே வேரூன்றி அருளுலக ஆன்ம நேய ஒருமைப்பாட்டை உருவாக்கி யிருக்கிறார்கள் என்ற போதிலும் தென்இமயம் முதல் வடவேங்கடம் வரையிலுள்ள குமரிக்கண்டத்தில் குமரியாற்றங் கரையிலும், காவிரியாற்றங்கரையிலும் மட்டுமே சூரியகுலச் சோழ அரசபாரம்பரியம் சித்தர் காக்கையர் எனப்படும் காகபுசுண்டரின் அரசபாரம்பரியமாக வாழ முடிந்தது.

**இன்றைய இந்தியாவில் அன்றைக்கு வாழ்ந்த அரசபரம்பரைகள்:-**

இதேபோல, இளமுறியாக் கண்டம் கடலுள் மறைந்த பிறகு உண்டான தென்குமரி முதல் வட இமயம் வரை இந்துமத நாடான இந்தியாவிற்குள் காவிரிக் கரையிலும் கங்கைக் கரையிலும் மட்டுமே பதினெண் சித்தர்களின் சூரியகுலச் சோழ அரச பரம்பரை மீண்டும் வாழ முடிந்தது. அதாவது, இந்தச் சூரியகுலச் சோழ அரசபரம்பரை இளமுறியாக் கண்டத்தில் இரண்டே இரண்டு ஆற்றங்கரைகளில் வாழ்ந்தது

போலவே அதற்குப் பிறகும் இரண்டே இரண்டு ஆற்றங்கரைகளில் வாழுவதாயிற்று.

**இராமாயணமும், பாரதமும் தமிழர்களின் வரலாறே:-**

“இப்பேருண்மைகளை யெல்லாம் மிகத் தெளிவாக விளக்கும் இரண்டாவது உகநாயகமான யக்ஞவல்லி எழுதிய யக்ஞவல்லியின் இராமாயணம் எனப்படும் சித்தர் இராமாயணமும்; தொடர்ந்து மூன்று உகங்களில் 18 ஆதி வால்மீகிகளால் கதையாக, காதையாக, கவிதையாக, கீதையாக எழுதப்பட்டே வந்திருக்கின்றது. இருந்த போதிலும், இம்மாபெரும் தமிழினச் சூரியகுலச் சோழ அரசபரம்பரையினர்க்கு உரிய இராமாயணம் தமிழினத்திற்கும், தமிழ்மொழிக்கும் உரியதாக ஆகிடாமல் போய்விட்டது.

“இதைப் போலவே, சென்ற யுகமான மூன்றுவது யுகத்தின் நாயகனுன தன்வந்திரி எழுதிய தன்வந்திரி மகாபாரதம் எனப்படும் சித்தர் பாரதம் பஃறுளி யாற்றங்கரையில் பிறந்து தாமிரபரணி யாற்றங்கரையிலும் வைகையாற்றங்கரையிலும் வளர்ந்திட்ட சித்தர் கருவூரரின் குருகுலத்தாருக் -குரிய சந்திர குலத்து பாண்டிய அரச பரம்பரையின் முழுமையான செய்திகளையும் விளக்கங்களையும் வழங்கக் கூடிய தன்வந்திரி பாரதத்தையும் தொடர்ந்து 18 ஆதிவியாசர்களால் கதையாக, காதையாக, கவிதையாக, கீதையாகப் பாடப்பட்டும் கூட இன்றைக்கு அவை தமிழினத்திற்கும், தமிழ்மொழிக்கும் உரியவையாக ஆகமுடியாமல் போய்விட்டன.

இப்படித் தமிழ்மொழிக்கும், தமிழினத்திற்கும், தமிழர்மதமான மெய்யான இந்துமதத்திற்கும் இரு கண்ணெனத் திகழும் சூரியகுலத்து இராமாயணமும், சந்திரகுலத்துப் பாரதமும் மிகமிக நுட்பதிட்பமாகச் செய்யப்பட்ட சூழ்ச்சிகளாலும், சதிகளாலும், மோசடிகளாலும், பிற இனத்தவருக்கும், பிற மொழியினருக்கும் உரியவையாகத் தோன்றும்படிச் செய்யப்பட்டு விட்டன. இந்த மாயத் தோற்றத்தை பிறமண்ணினரான பிரமணர்கள் வட இமயம் முதல் தென் குமரி வரை உள்ள பேரூர், சிற்றூர், கிராமம், குக்கிராமம், பட்டி தொட்டி முதலிய எல்லா இடங்களிலும் குடியேறி வாழ்ந்து செயல்பட்டுத்தான் சாதித்தார்கள்.

**பிறமண்ணினர்களால் தமிழருக்கு விளைந்த பாதிப்பு:-**

கலியுகம் பிறந்து இந்த இந்துமத இந்தியாவுக்கு ஏற்பட்ட கோள்நிலைப் பாதிப்புக்களால் இந்த இந்தியாவிற்குள் வந்திட்ட பிறமண்ணினரான பிரமணர் எனும் வட ஆரியர்கள் இமயம் முதல் குமரி வரை பரவியிருந்த தமிழ்மொழிக்குச் சமமாகத் தங்களுடைய எழுத்தற்ற பேச்சு மொழியைச் சித்தர்கள் மூலம் எழுத்தும் இலக்கிய இலக்கணமும் உள்ள சமசுக்கிருத (சமம் = தமிழுக்குச் சமம்; கிருதம் = செய்யப்பட்டது என்ற பொருளைத் தரக் கூடிய வட ஆரியச் சொல்) மொழியாக ஆக்கிச் செயல்பட்டார்கள். தமிழர்களுடைய மொழியான தமிழ்மொழியாலேயே உருவாகிட்ட சமசுக்கிருத மொழியின் மூலமே தமிழ்மொழிக்கும், தமிழினத்திற்கும், தமிழர்களுடைய மெய்யான இந்துமதத்திற்கும் மாபெரும் சிதைவுகளும், சீரழிவுகளும், ஈடுசெய்ய முடியாத இழப்புக்களும், அகற்ற முடியாத வட ஆரிய மாயைகளும் உருவாக்கப்பட்டு விட்டன. எனவேதான், பத்தாவது பதினெண் சித்தர் பீடாதிபதியான குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் அமராவதியாற்றங்கரைக் கருவூரர் ஞானச்சாரியாராகவும் குவலய குருபீடமாகவும் செயல் பட்டு மதவழிச் சமுதாயப் புரட்சியை உருவாக்கி மாபெரும் வெற்றி கண்டும் கூடத் தமிழ் மொழி காத்து வளர்க்கும் தமிழ்ச் சங்கத்தையோ, தமிழினத்தையும், தமிழ்மொழியையும் தமிழர்களின் இந்துமதத்தையும் காத்து வளர்த்த பாண்டியப் பேரரசையோ காக்க முடியாமல் போய் விட்டது.

**வைகைக்கரை மதுரையின் அழிவு:-**

அதாவது, கலியுகம் பிறந்து 1359 ஆண்டுக் காலம் கழித்து இந்த இந்துமத இந்தியாவிற்குள் வந்த வட ஆரியரால் உருவாக்கப்பட்ட போட்டியான பொய்யான ஹிந்துமதத்தின் மூலம் இமயம் முதல் குமரி வரை செழிப்பாக ஆட்சிநிலையிலிருந்த தமிழ்மொழி, தமிழினம், தமிழர் மதமான மெய்யான இந்துமதம் ஆகிய மூன்றையுமே காத்திட்டப் பாண்டியப் பேரரசு முழுமையாக மதுரையோடு எரித்துச் சாம்பலாக்கப் பட்டது. அந்தச் சாம்பலிலேயே தமிழ்ச் சங்க ஏடுகளும் தமிழ்ப் புலவர், மாணவர், மாணுக்கர், புரவலர் முதலியோரின் பிணங்களும் கலந்திட்டன. அதனுல், பத்தாவது பதினெண் சித்தர் பீடாதிபதி செய்த மதவழிச் சமுதாயப் புரட்சி மாபெரும் தோல்வியையே அடைந்தது. அதுமட்டுமல்ல, அவரையடுத்துப் பல நூற்ருண்டுகளாகத் தமிழ்மொழியோ, தமிழினமோ, தமிழர்மதமான மெய்யான இந்துமதமோ விழிச்சி பெறவில்லை, செழிச்சி பெறவில்லை, ஆட்சிமீட்சி பெறவில்லை.

**11வது பீடாதிபதியின் செயல்திட்டம்:-**

“இவற்றை யெல்லாம் எண்ணிப் பார்த்துத்தான் எமது அருளாட்சி அமைப்புப் பணியை மதவழி அரசியல் புரட்சியாக மாற்றினேன். எமது அரசியல் புரட்சியால் தமிழ்மொழி நல்ல விழிச்சி நிலையையும், எழிச்சி நிலையையும், செழிச்சி நிலையையும் அடைந்தது. ஆழ்வார்களின் பாடல்களும், நாயன்மார்களின் பாடல்களும் பிரபந்தமாகவும் திருமறையாகவும் தொகுக்கப்பட்டன. தமிழ்மொழி மூலம் எங்கும் எல்லாப் பூசைகளும் நிகழ்ந்திடத் தேவையான பூசாமொழிகள் தேர்ந்தெடுக்கப் பட்டுத் தொகுக்கப்பட்டு எல்லோரும் எளிதில் பெற்று பயன்படுத்துமாறு செய்யப்பட்டன. சுடுமண் ஓங்கிய நெடுவரைகளாக அதாவது செங்கற்கள் வைத்துக் கட்டப்பட்ட ‘மண்தளிகளாக’ இருந்திட்ட பெரும்பாலான பெரிய கோயில்கள் எல்லாம் ‘கற்றளிகளாக’ மாற்றப்படும் திருப்பணிகள் வெகுவேகமாக நடக்க ஆரம்பித்தன. ஆயிரமாண்டு இடைவெளியில் பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி உருவாக்கிச் சென்ற குரு, குருக்கள், குருமார், பூசாறி எனும் நால்வரிலும், 48 வகைப்பட்ட அருளாளர்களிலும், அருட் பட்டத்தவர்களிலும் ஏற்பட்டு விட்ட நலிவு, மெலிவு, குறைவு முதலிய அனைத்தும் ஈடுசெய்யப் பட்டு விட்டன.

“இன்றைக்கு அருளை அநுபவப் பொருளாக வழங்கவல்ல சித்தரடியான்களும், சித்தரடியாள்களும், சித்தரடியார்களும் போதுமான அளவிற்கு மேலேயே உருவாகி விட்டார்கள். இதனுல் தமிழர்கள் மதமான இந்துமதம் மீண்டும் ஆட்சிமீட்சியைப் பெற்றிருக்கிறது. இதேபோல், தமிழின உணர்வு, தமிழ்மொழிப் பற்றுணர்வு, தமிழ் நாட்டுணர்வு, தன்னம்பிக்கையுணர்வு, தமிழின உரிமை உணர்வு முதலியவை யெல்லாம் நல்ல வளவளர்ச்சி பெற்று வலிமை செழிச்சி பெற்றிருக்கின்றன. இதனுல் தமிழினம் நல்ல செழிச்சி மிக்க ஆட்சிநிலை பெற்றிருக்கிறது. ஆனுல், விழிச்சி நிலை பெறவில்லை.

**அன்னிய மோகத்திஞல் தமிழனே தமிழர் நல எதிரி:-**

“அதாவது தமிழினத்தவர்கள் விழிச்சி நிலை பெருத காரணத்தால்தான் தமிழர்களுக்கிடையில் தமிழர்களைத் தலைவர்களாக, ஆச்சாரியார்களாக, மடாதிபதிகளாக, பீடாதிபதிகளாக, வழிகாட்டிகளாக, வழித்துணைவர்களாக ஏற்றுப் போற்றும் உணர்வும், நம்பிக்கையும், ஆர்வமும் பெருமளவில் சிதைந்து சீரழிந்து விட்டன. அதாவது, **தமிழ்மொழிக்கோ, தமிழினத்திற்கோ, தமிழ்நாட்டிற்கோ, தமிழர் மதத்திற்கோ தீங்கோ, இழிவோ, அழிவோ, பழியோ, சிதைவோ,... ஏற்படுவது என்ருல் அதற்கு அன்னியர்களை விடத் தமிழர்களே பெரும்பாலும் காரணமானவர்களாக இருப்பார்கள்.** இதற்குக் காரணம் தமிழர்களுடைய தாழ்வு மனப்பான்மை மட்டுமல்ல, தமிழர்களுக்கு அன்னிய மொழிகளிடத்தும், அன்னியர்களிடத்தும்

அளவுக்கதிகமான மோகமும், நம்பிக்கையும் இருப்பதுதான்.

இந்த அன்னிய மாயை பதிஞேராவது பதினெண் சித்தர் பீடாதிபதியாகிய எமது காலத்திலேயே முழுமையாக அகற்றப்பட்டேயாக வேண்டும், அழித்தொழிக்கப் பட்டேயாக வேண்டும். இல்லாவிட்டால், இன்றைக்கு யாமே பத்தாவது பதினெண் சித்தர் பீடாதிபதியவர்களுக்குத் தோல்வி ஏற்பட்டது பற்றி மிகவும் வருந்துவது போல் வருங்காலத்தில் தோன்றப் போகும் 37 பதினெண் சித்தர் பீடாதிபதிகளும் யாம் இந்த அன்னிய மாயைகளை, அன்னிய ஆதிக்கங்களைத் தமிழினத் தலைவர்களின் தன்னம்பிக்கையின்மையைச் சரியான காலகட்டத்தில் உரிய நெறிமுறைகளைக் கையாண்டு அகற்ருமலோ அல்லது அழிக்காமலோ தோல்வியுறுவதற்காக வருந்தத்தான் செய்வார்கள். ஒருவேளை எம்மைக் குறைகூறிக் குற்றம் சாட்டினாலும் சாட்டுவார்கள்.

**11வது பீடாதிபதி சந்தித்த செயல்வழித் தடைகள்:-**

"இவற்றையெல்லாம் எண்ணித்தான் யாம், யாமே உருவாக்கிய இந்துமத அருட்பேரரசினை, உலகமே பூரிப்படையக் கூடிய இச்சோழப் பேரரசை எதிர்த்துப் போரிட்டுப் பேரழிவுகளை உண்டாக்கக் கூடிய மகாபாரதப் போருக்குத் தலைமை தாங்க நேரிட்டுவிட்டது. அதுவும், யாமே பதினெண்சித்தர் பீடாதிபதிகள்தான் இம்மண்ணுலகில் ஞானச்சாரியார்கள், ஞானபீடத்தவர்கள், அருளுலகக் காவலர்கள், அருளுலக வழிகாட்டிகள், அருளுலக வழித்துணைவர்கள் என்ற பேருண்மையை என்றென்றும் செயல்வடிவில் நிலைநிறுத்துவதற்காகக் கட்டிய முதல் கருவறை நெடிய கோபுரமுடைய தஞ்சைச் சத்திலிங்கம் பெரிய உடையார் கோயிலை மூன்ருண்டுகளுக்கு மேல் மொட்டைக் கோபுரமாகவே நிறுத்தி வைத்திட்டோம். அதுமட்டுமல்ல, கங்கையை முடியில் கொண்டான்புரத்தில் யாமே முன்னின்று கட்ட ஆரம்பித்த சிவலிங்கக் கோயிலையும், தாரமங்கலம் இலிங்கக் கோயிலையும் தருப்பைப் புல் வேய்ந்த குடிசைக் கோயிலாகத்தான் இன்னும் வைத்திருக்கிறேம். இம்மூன்று அருளுலகச் செயல்வழித் தடைகளால் உலகந் தழுவிய அருளுலகுக்கு எவ்வளவு பெரிய இடர்களும், இழப்புக்களும் உண்டாகி யிருக்கின்றன, வருங்காலத்தில் உண்டாகிடும் என்பதை யெல்லாம் எண்ணிப் பார்த்துப் பெரிதும் வருந்துகிறேம். ஆனாலும் பயனில்லை.

ஏனென்றால், நாட்டு வழக்கில் 'கிளியை வளர்த்துப் பூனை கையிலா கொடுப்பது?' என்ற ஓர் அறிவு வினா மூதுரையாக வழங்கப்படுகிறது. இதன்படிப் பார்த்தால் யாம் மேற்படி மூன்று கோயில்களையும் முழுமையான பேராற்றல் உடையவைகளாக உருவாக்கி அதன்மூலம் அருளுலக ஆட்சியையே இன்றைக்கு இச்சோழப் பேரரசை ஆட்டிப் படைக்கும் பிறமண்ணினரான பிருமணர் எனப்படும் வட ஆரியரிடம் ஒப்படைத்துச் செல்ல நேரிடுவது மிகப்பெரிய தவருகிவிடும்; அல்லது, கொடிய பாவச் செயலாகிவிடும். யாம், தமிழின மொழி மத விடுதலைக்காகவும், உலக ஆன்ம நேய ஒருமைப்பாட்டுக்காகவும், உலகச் சமத்துவ சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயம் அமைப்பதற்காகவும் உருவாக்கிய இந்தப் பொருளுலகச் சோழப் பேரரசையே இப்பிறமண்ணினரான பிருமணர் எனும் வட ஆரியருக்குப் பெருவிருந்தாக விட்டுச் செல்கிறேம். இம்மாபெருந் தவறு தவிர்க்கப்பட முடியாத ஒன்ருக ஆகிவிட்டது. இதனல், இம்மண்ணுலகில் அருளுலகுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ்மொழியும், தமிழினமும், தமிழ்நாடும் மிகமிகப் பெரிய பெரிய சொல்லொணுச் சோதனைகளையும், வேதனைகளையும், ஈடுகட்ட முடியாத இழப்புக்களையும், அகற்றுதற்கு அரிய

அறியாமைகளேயும், மடமைகளேயும், அடிமையுணர்வுகளேயும் அல்லவா பெற்றிடப் போகின்றது?!?!

**11வது பீடாதிபதி துவக்கிய மறவேள்வி:-**

“அதையெண்ணித்தான் யாம் உருவாக்கிய பொருளுலக அருளுலகக் கலைஞர்கள் அனைவரையுமே போர்க்களமெனும் கொலைக்களத்தில் மறவேள்வி எனும் அறவேள்வியை நிகழ்த்திட அழைப்பு விடுக்க நேரிட்டுவிட்டது. ஆனால், அந்த வேள்வியும் இப்பொழுது தடைப்பட்டு நிற்கின்றது. இதனால், மறவேள்வியாக நடைபெறப் போகும் அறவேள்வி செய்திடத் திரண்டிட்டவர்களுக்கிடையே தளர்ச்சியோ, மயக்கமோ, கலக்கமோ, குழப்பமோ ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காகத்தான் மெய்யான தமிழ் மொழியுணர்வும், இனவுணர்வும், மதவுணர்வும், நாட்டுணர்வும் உடையவர்களே மட்டும் இங்கே கூட்டி இந்த யமுனை ஆற்றங்கரைப் பாரதப் போரும், காவிரியாற்றங்கரைப் பாரதப் போரும் பற்றிய விளக்கத்தை வழங்குகின்றோம் யாம்.

“இந்தப் போரைப் பற்றிய ‘விளக்கம்’ மிகமிகக் குறுகியதாகவும், சிறியதாகவுமே இருக்க வேண்டுமென்ற தீர்மானம் செய்தே யாம் நூற்றுக்கணக்கான பிரதிகளில் எமது விளக்கக் குறிப்புக்களே உங்களுக்கு வழங்குவதற்காக எழுதி வைத்திருக்கிறோம். எனவே, யாம் ஏன் போர்க்கோலம் பூண்டோம்?; போர் செய்வதைத் தவிர வேறு வழியேயில்லை என்று முடிவு செய்தோம்?; இப்போருக்கு யார்யார் காரணமென்று கருதுகிறோமோ அவர்களே யெல்லாம் இப்புவிப் பரப்பிலிருந்தே முழுமையாக அகற்றிட முடிவு கட்டினோம்?.... என்பதை யெல்லாம் இங்கு குழுமியுள்ள உங்களுக்கு முறையாகவும், முழுமையாகவும் விளக்கியேயாக வேண்டும் என்ற முடிவில்தான் இந்த மூன்றுவது மேல்மாடிக் கூட்டத்தைக் கூட்டியிருக்கிறோம்.

**கி.பி.100வரை இந்தியா முழுதும் தமிழே பேசப்பட்டு வந்தது:-**

இங்குக் கூடியுள்ள அனைவருமே ஏறத்தாழ நமது (தமிழர்களுடைய) தாய்மொழியான தமிழ்மொழியில் உள்ள பதினெண் சித்தர்களுடைய சித்தர் நெறியான சீவநெறி எனும் மெய்யான இந்துமதத்தைப் பற்றிய பேருண்மைகளே அநுபவப் பூர்வமாக நன்கு உணர்ந்திருக்கின்றோம். அதாவது, இன்றைக்கு வடஇமயம் முதல் தென்குமரி வரை பரவியிருக்கும் இந்துமத நாடான இந்தியாவின் பூர்வீகக் குடிகள் அல்லது மூல மனிதர்கள் அல்லது முதல் மனிதர்கள் எனப்படுபவர்கள் தமிழர்களாகிய நாம்தான். இன்றைக்கே இமயம் முதல் குமரி வரை நமது தமிழ்மொழி நன்கு பரவலாகப் பரவி ஆட்சி நிலையில் இருக்கிறது. ஆயிரமாண்டுகளுக்கு முன் பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி காலத்தில் வடஇமயம் முதல் குமரி வரை முழுக்க முழுக்கத் தமிழ்மொழி பேசக் கூடிய தமிழகமாகவே பெரும்பாலும் விளங்கியிருக்கிறது.

ஆனால், அன்னிய மொழிகளாலும், இந்தப் பிறமண்ணினரான பிருமணர் எனப்படும் வட ஆரியர்களுக்குச் சித்தர்களால் தமிழுக்குச் சமமாக உருவாக்கிக் கொடுக்கப்பட்ட சமக்கிருத மொழியாலும்தான் புதிதாக ஆங்காங்கே தமிழ்மொழியோடு கலந்து பிறந்திட்ட மொழிகள் சில ஆங்காங்கே தனித்தனி வரிவடிவமோடு [எழுத்துக்களோடு] வாழ்ந்திருக்கின்றன. அப்பொழுதே மதுரையின் அழிவை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட சிலப்பதிகாரக் காப்பியத்தில் சேரன் நெடுஞ்சேரலாதனும் இமயம் முதல் குமரி வரை ஒருமொழி வைத்து ஆட்சி செய்தான் என்ற குறிப்பை வழங்குகிறது. ஆனால், வடவேங்கடம் முதல் குமரி வரையுள்ள தமிழ்கூறும் நல்லுலகத்திற்குள் நம் காலத்திலேயே சில தனி மொழிகள் புதிதாகத் தோன்றி வளர

ஆரம்பித்துவிட்டன. இதனுல் விரிந்து பரந்து கிடக்கும் தமிழகம் மிக விரைவில் குறுகிவிடும். இப்படிப்பட்ட **ஒரு பெரிய ஆபத்து தமிழ்மொழியின் அருமை, பெருமை, உரிமை, ஆட்சிநிலை முதலியவைகளை நம் தமிழர்கள் விழிபோல் பாதுகாக்கத் தவறியதால்தான் நிகழ்ந்தது.**

**அரசன் தவருல் உருவான சமசுக்கிருத மொழியின் ஆதிக்கநிலைகள்:-**

இன்னும் சொல்லப் போனுல், நமது சோழப் பேரரசின் மன்னன் அருள்மொழித் தேவனுல் இந்தப் பிறமண்ணினரான பிருமணருக்கும் இவர்களின் சமக்கிருத மொழிக்கும் தரப்படுகின்ற மேன்மை நிலைகளும், முதன்மை நிலைகளும், சிறப்புக்குரிய பெருமைநிலைகளும், உரிமை நிலைகளும் நம் தமிழர்களைத் தமிழ்மொழியை மறக்கவும், துறக்கவும், மறுக்கவும், வெறுக்கவும், பழிக்கவும், அழிக்கவும் முற்படக் கூடிய நிலையை உருவாக்கி விடும். அதற்குள் இந்தச் சமக்கிருத மொழியின் எழுத்தும், சொல்லும், இலக்கிய இலக்கணங்களும் வெகுவேகமாகத் தமிழுக்குள் புகுந்து இரண்டறக் கலந்து 'தமிழ்மொழி என்ருேர் தனிச் செம்மொழி' இருந்திட்டது என்ற பேருண்மையைக் கூட எவருமே எண்ணிப் பார்க்க முடியாதபடியான ஒரு நிலையை உருவாக்கிவிடும். அதற்குப் பிறகு தமிழினம் என்ற ஓர் இனம் அருளுலக மூல இனமாகக் காவல் இனமாக இருந்தது என்ற பேருண்மையையும் முழுமையாக அழித்தொழித்து விடும். அத்தகைய நிலைகள் உருவாகாமல் தடுப்பதற்காக யாம் எடுத்திட்ட பெருமுயற்சிதான் இப்பொழுது நிகழவிருக்கின்ற காவிரியாற்றங்கரை மகாபாரதப் போர்.

**மூன்று கடல்கோள்களையும் கடந்து தமிழிலக்கியங்கள் வாழ்ந்த சிறப்பு:-**

"முன்பு பனிமூடிய தென் இமயமலை முதல் இன்றுள்ள வடவேங்கடம் வரை மண்ணின் இளமைநிலை மாருத இளமுறியாக் கண்டமெனும் குமரிக் கண்டத்தில்தான் நமது தமிழ்மொழியும் இந்துமதமும் பெற்றிருந்த ஆட்சிநிலைகள் அடுத்தடுத்து நிகழ்ந்த மூன்று கடல் கோள்களால் மிகப்பெரிய பாதிப்புக்களைப் பெற்றிட்டன. அதனுல்தான், அந்தக் குமரிக் கண்டத்தில் பிறந்த சிவபுராணம், சத்திபுராணம், முருகபுராணம், மாபுராணம் எனப்படும் மாயோன் புராணம், இந்திரபுராணம்,...... முதலிய பல புராணங்கள் பெருமளவில் சிதைந்து வழக்கொழிய நேரிட்டது. அவற்றை யெல்லாம் யமுனைக்கரையில் பாரதப் போருக்கு முன்னுல் அந்த யுகநாயகரான தன்வந்திரியால் மீண்டும் வடிவமைப்புச் செய்யப்பட்டன. அவற்றை யெல்லாம் தொடர்ந்து 18 வியாசர்களும் அமுதத் தமிழ்மொழியில் எழில்மிகு சுவைநிறை இலக்கியங்களாக்கிக் காத்திட்டார்கள். ஆனுல் அவையெல்லாம் அந்த யமுனை ஆற்றங்கரையின் மகாபாரதப் போரையடுத்துப் பெருமளவில் சிதைந்து வழக்கொழிந்தன. எனவேதான், மதுரையிலிருந்த கடைச்சங்க காலத்து ஆதி வியாசர் எனும் அருங்கவி ஆதிவால்மீகி இராமாயணத்தை யக்ஞவல்லியின் கருத்தோட்ட அடிப்படையில் சமக்கிருத மொழியில் எழுதியது போல் மகாபாரதத்தைத் தன்வந்திரியின் கருத்தோட்டத்தில் சமக்கிருத மொழியில் எழுதியதோடு பதினெண்சித்தர்கள் உருவாக்கிய 18 புராணங்களையும் சமக்கிருத மொழியில் எழுதினுர். இவற்ருல்தான், இந்த வடஆரியர்கள் தங்களுடைய சமக்கிருத மொழியில்தான் இராமாயணம், பாரதம், பதினெண் புராணங்கள் முதலியவை எல்லாம் இருக்கின்றன; அவற்றிலிருந்து தமிழ்மொழி இராமாயண பாரதக் கதைகளும், கருத்துக்களும், புராணக்கதைகளும் கருத்துக்களும் தமிழ்மொழிக்கு வந்தன என்று கூற ஆரம்பித்து விட்டார்கள். இக்கூற்ருல்தான் தமிழ்மொழியின் தொன்மை, தமிழிலக்கிய வளம், அருளுலக இலக்கிய வலிமை முதலிய அனைத்துமே மிகப்பெரிய அளவில் கடுமையான பாதிப்பைப் பெற்றுவிட்டன. அதனுல்,

தமிழ்மொழி தன்னுடைய எல்லா வகையான அருமைகளையும், பெருமைகளையும், உரிமைகளையும், ஆட்சிநிலைகளையும் இழந்து அனுதையாக நேரிட்டது. அதாவது, தமிழ்மொழியின் வீழ்ச்சியே தமிழினத்தின் வீழ்ச்சியாயிற்று. தமிழ்மொழியின் தாழ்ச்சியே தமிழினத்தின் தாழ்ச்சியாயிற்று.


**தமிழிலிருந்து சமக்கிருதத்தில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டவற்றைப் பயன்படுத்தியே தமிழ்மொழி தாழ்த்தப் பட்டது:-**

"இப்படிக் காலப்போக்கில் தமிழ்மொழியின் வீழ்ச்சியும், தாழ்ச்சியும் தமிழினத்திற்கு வீழ்ச்சியையும், தாழ்ச்சியையும் நேரடியாக வழங்கி விட்டதால்தான் தமிழினத்தின் உயிர்நாடியான அல்லது உயிர்மூச்சான அல்லது உயிரான சித்தர் நெறியான சீவநெறி எனப்படும் மெய்யான இந்துமதம் மிகமிகப் பெரிய பெரிய சிதைவுகளையும், சீரழிவுகளையும், குழப்பங்களையும், மயக்கங்களையும், அறியாமைகளையும், புரியாமைகளையும் அடைய நேரிட்டுவிட்டது, அடைய நேரிட்டுவிட்டது, அடைய நேரிட்டுவிட்டது, அதாவது இந்துமதத்தின் 48 வகையான நிலைகளுக்குட்பட்ட கடவுள்கள் பற்றிய பேருண்மைகளனைத்தும் போலியான, பொய்யான, மோசமான, மோசடியான, கேவலமான, அவலமான, கண்மூடித்தனமான, மூடநம்பிக்கைகள் மிகுந்த சமக்கிருதக் கதைகளாலும், சமக்கிருதப் புராணச் செய்திகளாலும், சமக்கிருத வேதமத நடைமுறைகளாலும், நம்பிக்கைகளாலும் குரங்கு கைப் பூமாலை போல் உருத்தெரியாமல் பிய்த்தெறியப்பட்டு விட்டன.

**வடஆரியர்களின் சதிவேலைகள்:-**

அதாவது, தமிழர்களுக்குத் தன்னம்பிக்கை, தன்மானப் பற்று, இனமானப்பற்று, மொழிப்பற்று, நாட்டுப்பற்று, வாழ்வியல் ஒழுகலாறு, தனிமனித வாழ்வியல் கட்டமைப்பு, குடும்ப வாழ்வியல் கட்டமைப்பு, சமுதாய வாழ்வியல் கட்டமைப்பு, அரசியல் வாழ்வு கட்டமைப்பு,... முதலியவைகளை என்றென்றும் பசுமையாகப் பாதுகாத்திட்ட பதினெண் சித்தர்களுடைய மெய்யான இந்துமதம் தமிழர்களை விட்டு அகன்றிடும்படிச் செய்யப்பட்டு விட்டது. அதாவது, தமிழர்களுக்கே தங்களுடைய மதம் முறையாகவும் முழுமையாகவும் அறிவுப் பூர்வமாகத் தெரியாத ஒன்றாக, புரியாத ஒன்றாக ஆக்கப்பட்டுவிட்டது. அதன் விளைவாகத் **தமிழர்களே தங்களுடைய மெய்யான இந்துமதத்தைக் கேலி செய்யவும், கேவலமாக நினைக்கவும், வெறுத்து மறுத்துப் பேசவும்....** முற்பட்டிடக் கூடிய அவல நிலைகள், அழிவு நிலைகள், இழிவு நிலைகள் உருவாகி விட்டன, உருவாகி விட்டன, உருவாகி விட்டன.

"இப்படித் தமிழர்கள் என்றென்றைக்கும் இனஉணர்வோடும், மொழியுணர்வோடும், நாட்டுணர்வோடும், மதப் பற்றுணர்வோடும் மீண்டும் ஒன்றுதிரண்டு ஒற்றுமைப்பட்டு ஒருமைப்பாட்டுடன் வாழமுடியாதபடி மிக நுட்பதிட்பமாக எல்லாவகையான சதிவேலைகளையும், சூழ்ச்சி வேலைகளையும் நன்கு திட்டமிட்டு நிதானமாக நிறைவேற்றி விட்டார்கள் இந்த வட ஆரியர்கள். எனவேதான், இவர்களின் பிடியிலிருந்து தமிழர்களை



**குவலய குருபீடம்,**
**12வது பதினெண்சித்தர் பீடாதிபதி**
**ஞாலகுரு சித்தர் அரசயோகி கருவூரர்**

எவராலும் என்றைக்குமே எத்தகைய முயற்சிகளைச் செய்தாலும் விடுவிக்கவே முடியாது என்ற ஓர் அச்சமிகு நிலை உருவாகிவிட்டது.

**தமிழர்கள் உருவாக்கிய தஞ்சைப் பெரியகோயிலுக்குளேயே பிருமணர்கள் நுழைந்து விட்ட அவலநிலை:-**

இந்த அச்சமிகு நிலையை உறுதிப்படுத்துவது போல் நமது சோழப் பேரரசின் மன்னன் அருள்மொழித் தேவன் இப்பொழுது யாம் கட்டி வரும் அருளுலகக் காப்பகமான அருளுலகப் பொருளுலக இருளகற்றும் அருட்பெருஞ்சோதியான தஞ்சைப் பெரிய உடையார் சத்திலிங்கக் கோயிலையும் இந்த வட ஆரியர்களிடமே ஒப்படைத்து விட்டான். எனவேதான், யாம் இந்தப் பெரிய கோயிலை மொட்டைக் கோபுரக் கோயிலாக நிறுத்த நேரிட்டு விட்டது. ஆனால், இம்மொட்டைக் கோபுர நிலை தொடர்ந்து 48 மாதங்களுக்கு மேல் நீடிக்குமேயானால், இக்கோயில் மட்டுமல்ல; இக்கோயிலோடு சேர்த்து முக்கோணச் சத்திபீடம் நிறுவுவதற்காகக் கட்டப்பட இருக்கும் கங்கையை முடியில் கொண்டான்புரத்துச் சிவலிங்கக் கோயிலும், தாரமங்கலத்து இலிங்கக் கோயிலும் பெருமளவில் மக்களை ஈர்த்து அருட்பயன் நல்கும் திருத்தொண்டு நிறைவேற முடியாமல் போய்விடும். அதுமட்டுமல்ல, இப்பூவுலகில் உள்ள 1008 வகைச் சிவாலயங்களையும், 243 வகைச் சத்திபீடங்களையும், 108 வகைத் திருப்பதிகளையும் புத்துயிர்ப்புச் செய்யும் பணி இப்போது யாம் உருவாக்கும் முக்கோணச் சத்தி பீடத்தின் வெற்றியைப் பொறுத்துத்தான் இருக்கிறது. எனவே, விரைவில் தஞ்சைப் பெரிய உடையார் கோயில் மொட்டைக் கோபுரமாக இருக்கும் நிலையில் மாற்றத்தை உருவாக்கியே தீரவேண்டும்.

ஆனால், அதற்குரிய ஆக்கப் பூர்வமான செயல்நிலைகளுக்கு இச்சோழப் பேரரசின் மன்னன் அருள்மொழித்தேவன் தன்னைத் தயாரித்துக் கொள்ளத் தயாராக இல்லை. எனவேதான், இந்துமதத்தைப் பாதுகாப்பதற்காக, அதன் மூலம் தமிழ்மொழியைப் பாதுகாப்பதற்காக, அதன்மூலம் தமிழினத்தைப் பாதுகாப்பதற்காக, அதன்மூலம் நிலையாக அருளுலகப் பொருளுலக இருளகற்றும் பணிகளைத் தொடர்ந்து காலங்கள் தோறும் நிகழ்ந்திடச் செய்வதற்காக இந்தத் தெய்வீகத் தமிழ்நாட்டை அருட்பயிரின் நாற்றங்காலாக என்றென்றும் விளங்கிடுமாறு செய்வதற்காக யாமே போர்க்கோலம் பூண்டு இந்தக் காவிரியாற்றங்கரை மகாபாரதப் போரை நிகழ்த்த முன்வந்துள்ளோம்.

இந்த நேரத்தில் தமிழர்களின் பாரம்பரியமான சமய சமுதாய நீதிகளையும், நெறிமுறைகளையும் காப்பாற்ற வேண்டிய அரசியல் சட்டதிட்டங்கள் மிகப்பெரிய தடுமாற்ற நிலைகளையும், கேடுநிலைகளையும் அடைந்து தமிழினத்தின் அரசியல் வாழ்வையே எவ்வளவு விரைவாகவும் விரிவாகவும் பாழாக்கி விட்டது என்ற சூழ்ச்சி வரலாற்றை, சோக வரலாற்றை உங்களுக்குக் குறிப்பாக விளக்கிக் கூறித்தான் யமுனை ஆற்றங்கரை மகாபாரதப் போருக்கும், நடக்கவிருக்கும் காவிரி யாற்றங்கரையின் மகாபாரதப் போருக்கும் உள்ள தொடர்புகளை விளக்கிட முன்வந்துள்ளோம் யாம்.

**மனு நீதிநூல் பற்றிய அரிய உண்மைகள்:-**

அதாவது, பதினெண்சித்தர்களில் ஒருவர் இம்மண்ணுலகின் பயிரினங்களுக்கும் உயிரினங்களுக்கும் ஈசனுக, தலைவனுக, மேலாளனுகத் தோன்றிய மணீசன் எப்படியெப்படித் தனிமனித வாழ்வு, குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு, சமய வாழ்வு, அரசியல் வாழ்வு எனும் ஐந்நிலை வாழ்க்கையை வாழவேண்டும் என்பதற்குரிய சட்டதிட்டக் கட்டுப்பாடுகள், விதிமுறைகள், நீதிநெறிகள்... முதலியவைகளை யெல்லாம் இம்மண்ணின் நீதி எனும் பொருள்பட 'மனுநீதி' எனும் நூலாக வடித்துக் கொடுத்தார். அவரின் இயற்பெயர் என்னவென்றே தெரிந்து கொள்ளமுடியாத அளவிற்கு அவரைச் 'சித்தர்

மனு' என்ற பெயரிலேயே அனாதிக் காலம் முதல் இன்றுவரை எல்லோரும் குறிப்பிடும் மரபு ஏற்பட்டுவிட்டது. இந்தச் சித்தர் மனுவின் வாழ்வியல் சட்டநூலான 'மனுநீதி' எனும் நூலால் தான் மண்ணின் ஈசன் என்ற நினைப்பில்லாமல் கண்மூடித் தனமாக விலங்குகளோடு விலங்குகளாக வாழ்ந்த மணீசர்கள் மென்மையான பண்பட்ட நினைப்பையுடைய மனத்தைப் பெற்று மனிதர்களாக மாறினார்கள் அல்லது மாற்றப்பட்டார்கள். இதுதான் விண்வெளியிலுள்ள அண்ட பேரண்டங்களிலிருந்து இம்மண்ணுலகிற்கு வந்திட்ட பதினெண் சித்தர்களும் பதினெட்டாம்படிக் கருப்புகளும் தமிழ்மொழியில் வழங்கிய மெய்யான இந்துமதத்தின் சாதனை. இந்த மனுநீதி நூலே பதினெண்சித்தர்களுடைய மிகச் சிறந்த அருட்கொடை, அறிவுக்கொடை.

"இம்மண்ணுலகின் மனித இனங்களும், மொழிகளும், மதங்களும் ஒன்றோடொன்று போட்டியிட்டு முட்டிமோதிக் கொண்டு ஆக்கிரமிப்புகளையும், அடிமைநிலைகளையும், சுரண்டல்நிலைகளையும், அழிவுநிலைகளையும், இழிவுநிலைகளையும் உருவாக்கிடாமல் எல்லாமே ஒன்றை ஒன்று மதித்து ஏற்றுப் போற்றிப் பேணிப் பாதுகாத்து சமத்துவ வாழ்வு, சகோதரத் தத்துவ வாழ்வு, ஒற்றுமை வாழ்வு, ஒருமைப்பாட்டு வாழ்வு... வாழுவதற்குரிய வழியை வகுத்துத் தருகின்ற ஒன்றாகத்தான் மூலப் பதினெண்சித்தர்களில் ஒருவரான மனு எழுதிய மனுநீதி எனும் நூல் உள்ளது. எனவேதான், இந்த ஒரு நூலை அது பிறந்த தமிழ் மொழியிலேயே இல்லாத ஒன்றாக ஆக்கிட வேண்டும் என்று திட்டம் தீட்டிச் செயல்பட்டார்கள் இந்தப் பிறமண்ணினரான பிருமணர்கள். இப்படிப் பிறமண்ணினரான பிருமணர்கள் இம்மண்ணுலகின் மேன்மைக்கு வழிவகுத்துக் கொடுத்த பதினெண் சித்தர்களுடைய மனுநீதி எனும் நூலைச் சமக்கிருத மொழியில் தங்களுடைய வேதமதத்திற்கு ஏற்பத் திரித்தும் மாற்றியும் எழுதிட முயன்றார்கள்.

**தமிழரின் மனுநீதி நூல் சமக்கிருதத்தில் மொழிபெயர்க்கப் பட்ட விதம்:-**

"கடைச்சங்க காலத்தில் யக்ஞவல்லியின் தமிழ் இராமாயணத்தைச் சமக்கிருதத்தில் மொழி பெயர்க்க ஆதி வால்மீகி கிடைத்தது போல், தன்வந்திரியின் தமிழ்மொழிப் பாரதத்தைச் சமக்கிருதத்தில் மொழி பெயர்க்க ஆதிவியாசர் கிடைத்தது போல், தமிழிலுள்ள புராணங்கள் அனைத்தையும் சமக்கிருதத்தில் மொழிபெயர்க்க அதே ஆதிவியாசர் பயன்பட்டது போல் தமிழிலுள்ள மனுநீதி நூலைச் சமக்கிருத மொழியில் மொழிபெயர்க்க கடைச்சங்கத்தைச் சேர்ந்த ஓர் ஆதிமனு கிடைத்தார். ஆனால், இவர் மனுநீதி நூலை அப்படியே சமக்கிருத மொழியில் மொழிபெயர்க்க முடியுமே தவிரக் கூட்டியோ குறைத்தோ அல்லது திரித்தோ மாற்றியோ தன்னால் எழுத இயலாது என்று மறுத்து விட்டார்.

எனவே, இந்தப் பிறமண்ணினரான பிருமணர்கள் அவரிடம் மனுநீதியின் பொருளை விளக்கமாகக் கேட்டறிந்து கொண்டு அதிலிருந்த சூத்திற முறைப்படி, சூத்திர சூத்தர முறைப்படி தங்களுடைய கருத்துக்களை சமக்கிருத மொழியில் சூத்திரங்களாக மட்டும் எழுதி ஒரு புதிய மனுநீதி நூலை உருவாக்கினார்கள். இந்த மனுநீதி நூலுக்கு நூற்றுக்கும் மேற்பட்ட பிருமணச் சமக்கிருதப் புலவர்கள் ஆசிரியர்களாக அமைந்திட்டார்கள். இது ஒரு கூட்டு முயற்சியால் அமைந்த நூல். எனவேதான், இந்த நூலில் முன்னுக்குப் பின் முரண்பாடுகளும், கூறிய கருத்தையே பல இடங்களில் திரும்பத் திரும்பக் கூறுவதென்ற தவறும் நிறைய இருக்கின்றன. இது மட்டுமல்ல, இந்த நூலில் சூத்திரப் பாக்களின் மொழிநடை, மிகுந்த தராதர வேறுபாடுகளை உடையதாக இருக்கிறது.

**சமக்கிருத மனுநீதி நூலில் புகுத்தப்பட்ட குழப்பங்கள், ஏற்றத்தாழ்வுகள்:-**

இருந்த போதிலும், இந்தப் பிறமண்ணினரான பிருமணர்கள் தாங்கள் தங்களுடைய வாழ்விற்காக ஒரு புதிய நாட்டிற்கு வந்திருக்கிறோம் என்ற உணர்வில் மிகுந்த ஒற்றுமையோடும், ஒருமைப்பட்டோடும், கட்டுப்பாட்டோடும் தங்களுடைய வேதமத நெறிப்படி நெருக்கமான உறவுமுறைப்படி வாழுகிறார்கள். அதனால், இவர்கள் கற்பனையாக ஆதிமனு என்ற ஓர் ஆசிரியரைப் படைத்திட்டார்கள். அப்படி அவர்கள் படைத்த ஆதிமனு எனும் ஆசிரியரைப் பற்றிய கதைகளையும், அவரெழுதிய மனுநீதியின் கருத்துக்கள் பற்றிய விளக்கங்களையும் எல்லாச் சமக்கிருதப் புராணங்களிலும், இதிகாசங்களிலும் மிக விரைவாகப் புகுத்தினார்கள். அதனால், அவர்கள் தங்களுடைய சமக்கிருதமொழி உலகிலும், வேதமத உலகிலும், தாங்கள் புதிதாக உருவாக்கிய ஹிந்துமத உலகிலும் சமக்கிருத மொழிப் புலவர்கள் பலர்கூடி எழுதிய மனுநீதி நூலுக்கு மிகுதியான செல்வாக்கையும், புகழையும், ஆதரவையும் உருவாக்கினார்கள். அதே நேரத்தில் நாடு முழுதும் தேடி மூலப் பதினெண்சித்தர்களில் ஒருவர் எழுதிய மனுநீதி நூலை எரித்துச் சாம்பலாக்கி இருந்த இடம் தெரியாமல் ஆக்கிடும் பணியில் ஈடுபட்டார்கள். இப்பணியில் இவர்கள் முழு வெற்றி பெற்றிட்டதால்தான் என்றைக்குமே தமிழர்கள் ஒற்றுமைப்பட முடியாத அளவிற்குச் சாதிப் பிரிவுகளைத் தமிழர் சமுதாயத்தில் நிலைத்து இடம் பெறும்படிச் செய்தார்கள். அதுமட்டுமல்ல, ‘சாதிக்கொரு நீதி’ என்பதை அரசியல் விதியாக, அரசியல் சட்டமாக மிக எளிதாக ஆக்கிட்டார்கள், இப்பிருமணர்கள். இதன்மூலம் சாதிகளுக்கிடையே ஏற்றத் தாழ்வுகள், தீண்டாமைக் கொடுமைகள், போட்டாபோட்டிச் சண்டைகள் முதலியவைகளை எல்லாம் மிகமிக நுட்பதிட்பமாக வளர்த்து விட்டார்கள். இம்முயற்சிகளில் இவர்களுக்குக் கிடைத்த மாபெரும் வெற்றிதான் தமிழின மொழிமத விடுதலை வாழ்வுக்குச் சாவுமணி அடித்தது. தமிழினப் பற்றுணர்விற்கும், ஒற்றுமை யுணர்விற்கும், மொழிப் பற்றுணர்விற்கும், உரிமை யுணர்விற்கும், மதப்பற்றுணர்விற்கும், பெருமித உணர்விற்கும், ஒற்றுமை யுணர்விற்கும் கல்லறை கட்டியது, மரண சாசனம் எழுதியது.

**சமக்கிருத மொழியும் பொய்யான ஹிந்துமதமுமே பிருமணர்களின் ஆயுதங்கள்:-**

அதாவது, சமக்கிருத மொழியில் புதிதாக எழுதப்பட்ட மனுநீதி எனும் சாதனம்தான் பதினெண் சித்தர்களுடைய மெய்யான இந்துமதப் போதனைகளையும், சாதனைகளையும் தாக்கித் தகர்த்துத் தவிடுபொடியாக்கியது. இப்படி இந்தப் பிறமண்ணினரான பிருமணர்கள் மிகுந்த கட்டுப்பாட்டோடும், ஒற்றுமையோடும், ஒருமித்த போக்கோடும் நன்கு திட்டமிட்டுத் தங்களுடைய வேதமதத்தையும், சமக்கிருத மொழியையும் ஆயுதங்களாகப் பயன்படுத்தித் தொடர்ந்து இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக வடஇமயம் முதல் தென்குமரி வரை பரந்து விரிந்து கிடக்கும் இந்துமத இந்தியா முழுதும் தங்களுடைய போரை நிகழ்த்தி வருவதால் இவர்களை நேரடிப் போர்க்களத்தில் சந்தித்து வெற்றி கொள்வது என்பது இயலாத காரியம்.

இன்னும் சொல்லப்போனால் இந்தப் பிறமண்ணினரான பிருமணர்களில் ஒவ்வொரு ஆணும் பெண்ணும், ஒவ்வொரு சிறுவனும் சிறுமியும் தங்களுடைய இன நல்வாழ்விற்காகத் தங்களை எப்போதும் போருக்குத் தயாராக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதாவது இந்தப் பிருமண இனத்தைச் சேர்ந்த ஒவ்வொருவரும் தங்களுடைய சமக்கிருத மொழியையும், தங்களுடைய வேதமதத்தையும், தாங்கள் புதிதாக உருவாக்கிய ஹிந்து மதத்தையும் காப்பாற்றுவதற்காக, உயர்வாகச் சித்தரித்துக் காட்டுவதற்காக, இந்தியாவின் இந்துமதத்தோடு போரிடுவதற்காகத் தேவையான

அளவு தெளிவாகக் கற்று வைத்திருக்கிறுர்கள். எனவேதான், இந்தப் பிறமண்ணினரான பிருமணர்களுக்கும், இந்த இந்துமத இந்தியாவின் பூர்வீகக் குடிகளான தமிழர்களுக்கும் இடையில் நடக்கும் கருத்துப் போரில் தொடர்ந்து இப்பிருமணர்களே வெற்றி பெற்று வருகிறுர்கள்.

**11வது பீடாதிபதிக்கு ஏற்பட்ட தோல்விக்குக் காரணங்கள்:-**

எனவேதான், கடந்த நான்கு யுகமாக அருளுலகின் மூலவர்களாகவும், காவலர்களாகவும், வாரிசுகளாகவும் உள்ள தமிழர்களே தங்களுடைய மெய்யான இந்துமதத்தையும், தங்களுடைய தாய்மொழியான அண்டபேரண்ட அருளுலக ஆட்சிமொழியான அமுதூறு செந்தமிழ் மொழியையும் மறந்து துறந்து மறுத்து வெறுத்து எதிர்த்துச் செயல்படக் கூடிய இழிநிலேயையும், அழிநிலேயையும் அடைந்து விட்டார்கள். எனவே, இவர்களுக்குத் தாய்மொழிப் பற்றுணர்வையும், மெய்யான இந்துமதப் பற்றுணர்வையும் மீண்டும் தோற்றுவிப்பது என்பது யாம் பெற்றுள்ள, பெறப் போகின்ற அரசியல் வெற்றிகளால் முடியாது! முடியாது! முடியாது! முடியவே முடியாது!

“அதாவது முதலாம் விசயாலயன் எனப்படும் வெற்றித் திருமகன் முதல் இன்றைக்கு இராசராச சோழன் எனப்படும் அருள்மொழித் தேவன் வரை எல்லோருமே தங்களுடைய தன்னலத்தாலும், புகழ் வெறியாலும், பொருட்பேராசையாலும், அற்பசொற்ப இன்ப உணர்வுகளாலும் தங்களுடைய இனத்துக்கும், மொழிக்கும், மதத்துக்கும் கணக்கிறந்த துரோகச் செயல்களேயும், விரோதச் செயல்களேயும் தொடர்ந்து செய்திட்டார்கள். எனவே, எம்மால் மதவழிச் செய்யப்பட்ட அரசியல் புரட்சிகளால் எதிர்பார்த்த பயன் விளேயவில்லே, விளேயவில்லே, விளேயவில்லே, விளேயவேயில்லே! இதனுல்தான், யாம் நிகழ்த்துவதற்குத் தயராக இருக்கும் காவிரியாற்றங்கரையின் மகாபாரதப் போரை அப்படியே தடுத்து நிறுத்திட முடிவெடுக்க நேரிட்டுள்ளது.

**11வது பீடாதிபதி ஏன் போருக்குத் தயாராக வில்லே:-**

ஏனென்றுல், கலியுகத்திற்கு முந்திய துவாபரயுகத்தின் இறுதியில் நிகழ்ந்திட்ட யமுனே ஆற்றங்கரையின் மகாபாரதப் போரில் ஏற்பட்டிட்ட பேரழிவுகளால் ஞானுச்சாரியார்கள் மிகத் தெளிவான வரைமுறைகளோடும், வரலாறுகளோடும், சாத்திர சாத்தர சாத்திறங்களோடும் மூன்று யுகங்களாகக் கட்டிக் காத்து வளர்த்திட்ட மெய்யான இந்துமதம் சின்னுபின்னமாகச் சிதைந்து சீரழிந்து விட்டது. அதாவது இந்தப் பதினெண் சித்தர்களுடைய மெய்யான இந்துமத இந்தியாவிற்குள்ளேயே பதினெண் சித்தர்கள், பதினெட்டாம்படிக் கருப்புகள், 48 வகைச் சித்தர்கள், 48 வகை வழிபடு நிலேயினர்கள், 48 வகை அருளாளர்கள், 48 வகை அருட்பட்டத்தவர்கள், 48 வகையான தர, திர, திற கடவுள் நிலேயினர்கள், 48 வகையான கருவறைகள், 48 வகை வெட்டவெளிக் கருவறைகள், 48 வகையான அருட்கலேகள் முதலியவைகள் பற்றியும் இவற்றை நான்கு யுகங்களிலும் தேவைக்கேற்பப் புதுப்பித்தும், செப்பனிட்டும், மறுமலர்ச்சியடையச் செய்தும், வளவளர்ச்சி அடையச் செய்தும் ஆட்சிமீட்சி பெறச் செய்தும் செயல்பட்டிடுவதற்காகத் தோன்றக் கூடிய 48 பதினெண் சித்தர் பீடாதிபதிகளான ஞானுச்சாரியார்கள் பற்றியும் உள்ள அனேத்து வகையான செய்திகளும், நடைமுறைகளும், வரலாறுகளும், இலக்கியங்களும் பெருமளவில் இருந்த இடம் தெரியாமல் போய்விட்டன.

**போரினுல் ஏற்படும் இழப்புக்கள் வெற்றியைப் பயனற்றதாக்கி விடும்:-**

அதாவது இந்துமதம் என்றுலேயே போருக்குரிய மதம், அழிவை நியாயப்படுத்தும் மதம் என்ற ஒரு தவருன கருத்தோட்டமும், அச்ச உணர்வும் யமுனே ஆற்றங்கரையின் மகாபாரதப் போரால்

உருவாகி விட்டது. எனவே, இப்பொழுது யாம் கலியுகம் பிறந்து 4000 ஆண்டுகள் கழிந்திருக்கும் ஆரம்ப நிலையிலேயே மீண்டும் ஒரு மகாபாரதப் போரை காவிரியாற்றங்கரையில் நிகழ்த்திட்டால் இனிவரும் 37 பதினெண்சித்தர் பீடாதிபதிகளும் எவ்வளவுதான் மிகச் சிறப்பாக ஞானச்சாரியாராக, இந்துமதத் தந்தையாக, குவலய குருபீடமாக, தமிழ்மொழியின் மெய்ஞ்ஞான சபைத் தலைவராகத் தமிழினத்தின் வழிகாட்டியாக, வழித்துணையாக, குருபீடமாகச் செயல்பட்டிட்டாலும் நமது மெய்யான இந்துமதத்தைக் கடந்த யுகங்களில் இருந்தது போல் நல்ல வடிவமைப்பையும், வலிமைப் பொலிவையும், வளவளர்ச்சியையும், முயற்சி உயர்ச்சியையும், ஆட்சிமாட்சியையும், பயன்மிக்கப் பயிற்சிச் செழிச்சிகளையும்,... பெறுமாறு செய்திட இயலாது! இயலாது! இயலாது! இயலவே இயலாது! எனவே யாமிந்தக் காவிரியாற்றங்கரைப் போரை நிகழ்த்தாமலேயே அருட்படையை நாடு முழுதும் பிரிந்து சென்று பதினெண்சித்தர்களுடைய மெய்யான இந்துமதத்திற்கு உரிய போதனைகளையும், சாதனைகளையும் பரப்பி மெய்யான இந்துமதத்தின் மறுமலர்ச்சிக்காகவும், ஆட்சிமீட்சிக்காகவும் செயல்பட ஆணையிடுகிறோம்.

"எமது இந்த முடிவு எமது எதிர்பார்ப்புக்கு நேர்மாறான பயன்களை உருவாக்க நேரிட்டாலும் நேரிடலாம். இருந்தாலும், அதற்காகவும் யாம் கவலைப்படவில்லை. ஏனென்றால், யமுனை ஆற்றங்கரை மகாபாரதப் போரில் அத்தர, அத்திர, அத்திறங்கள் ஏவப்பட்டும், யுகநாயகர்கள் தன்வந்திரியும், கண்ணதேவனும் எண்ணற்ற அருட்செயல்களைச் செய்தும் நிகழ்த்தப்பட்ட அருட்போரினால் நமது மெய்யான இந்துமதத்திற்கும், இதன் மூலவர்களாகவும், காவலர்களாகவும் இருக்கக் கூடிய நம் தமிழர்களுக்கும் ஏற்பட்டிட்ட இழப்புக்கள், அழிவுகள், சிதைவுகள், சீரழிவுகள் ஏராளம், ஏராளம், ஏராளம். ஆனால், யாம் எமது 48 வகையான நிறுவன நிருவாகங்களிலும் உருவான பேராற்றல் மிக்க சித்தரடியான்களையும், சித்தரடியாள்களையும், சித்தரடியார்களையும் போர்க்கோலம் பூண்டு போர்க்களம் வந்து பாசறை அமைக்கச் செய்தும் கூட காவிரியாற்றங்கரை மகாபாரதப் போரை நிகழ்த்தாமல் நிறுத்திடுவதால் நமது மதத்துக்கும், இனத்துக்கும், மொழிக்கும், கணிசமான அளவு சிதைவுகளும் சீரழிவுகளும் ஏற்பட்டே தீரும்,

**11வது பீடாதிபதி காட்டும் வழி:-**

ஆனால், அடுத்து வரக் கூடிய ஞானச்சாரியார்களாவது தங்கள் போக்கில் நிதானமாகவும், அமைதியாகவும், அடக்கமாகவும் நாடுதழுவி அருட்போர்ப் படையினராகச் சித்தரடியான்கள், சித்தரடியாள்கள், சித்தரடியார்கள் முதலியவர்களைத் தயாரித்து ஒவ்வொரு தமிழனின் உள்ளத்திலும் இல்லத்திலும் நெடிய தொடர் போருக்கு உரிய பாடிவீடாகவும், பாசறையாகவும் தயாரித்திட உதவிடும் வண்ணம் எமது முடிவு அமைந்திடும்.

எனவே யாம் எமது காவிரியாற்றங்கரையின் மகாபாரதப் போரை இமயம் முதல் குமரி வரை பரந்து கிடக்கும் நாடு முழுவதும் தொடர்ந்து இக்கலியுகம் முழுதும் கூட நிகழ்ந்திடும் வண்ணம் அணிவகுத்துச் செல்கிறோம். இதற்காக இனிவரும் முப்பத்தேழு ஞானச்சாரியார்களும் அருட்போரைத் தொடர்ந்து தங்கள் போக்கில், தங்கள் கால நோக்கில் நிகழ்த்திக் கொள்ளட்டும். ஆனால், அரசியலில் ஆளுகின்ற அரசர்களாக, அமைச்சர்களாக, தளபதிகளாக, வேளிர்களாக, வேளாளர்களாகப் பொறுப்பேற்பவர்களை மட்டும் எக்காரணம் பற்றியும் நம்பிட வேண்டாம்.

**தஞ்சைப் பெரியகோயிலுக்குள் அரசியல்வாதிகள் நுழைந்தால் தண்டிக்கப் படுவர் என்பது என்றென்றும் உள்ள உண்மை:-**

இந்தக் கருத்தை நிலைநிறுத்தும் வண்ணம்தான் **யாம் கட்டியுள்ள தஞ்சைச் சத்திலிங்கப் பெரிய உடையார் கோயிலுக்குள் எக்காலத்திலும்**

**நாடாளுகின்றவர்கள் இறுமாப்போடும், செருக்கோடும், அதிகார ஆணவத்தோடும் நுழைந்தால் உடனடியாக அருளுலகத் தண்டனைகளைப் பெறுமாறு அருளாணை விதித்துச் செல்லுகிறோம்.** எனவே, இனிமேல் யாரும் மிகப்பெரிய மகாபாரதப் போரால் அருளுலகப் பொருளுலக இருளகலும் என்று நம்பிட வேண்டாம். அதாவது, அண்டபேரண்ட அருளுலக ஆட்சிமொழியான அமுதூறு செந்தமிழ் மொழியின் விழிச்சியையும், எழிச்சியையும், செழிச்சியையும் பொறுத்துத்தான் மெய்யான இந்துமதத்தின் மறுமலர்ச்சியும், வளவளர்ச்சியும், ஆட்சிமீட்சியும் ஏற்பட்டிடும், ஏற்பட்டிடும், ஏற்பட்டிடும் என்பதே எமது முடிவான கருத்து. இக்கருத்தைத்தான் எமது காவிரியாற்றங்கரையின் மகாபாரதப் போரில் கூறப்படும் கதைத் தத்துவமாக, காதைத் தத்துவமாக, கவிதைத் தத்துவமாக, கீதைத் தத்துவமாக விளக்குகிறோம் யாம்."

**ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்**

**ஓம் தென்னாடுடைய சிவனே போற்றி!**
**ஓம் எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி**
**ஓம் அர அற நமப் பார்வதி பாதமே போற்றி!**
**ஓம் அர அற மகாதேவப் பாதமே போற்றி!**

**//இதன் மூலநகல்: சித்தரடியான் ச.துரைராசன் அவர்களின் கையெழுத்தில் கிடைத்தது//-**

இந்துமதமே இம்மண்ணுலக முதல் மதம்; இதுவே அனைத்து மதங்களுக்கும் தாய்.

இம்மண்ணுலகுக்குரிய மதங்கள் அனைத்தும் இந்து மதத்திலிருந்தே பிறக்கும் என்ற பேருண்மையினைக் குருபாரம்பரியம் மிகமிகத் தெளிவாக விளக்குகிறது. இக்குருபாரம்பரியம் காலங்கள் தோறும் பதினெண்சித்தர் பீடாதிபதிகளாலும் அவர்களது விந்துவழி வாரிசுகளாலும் புதுப்பித்து எழுதப்படும்.

**திருமாளிகைத் தேவர் குருபாரம்பரிய வாசகம்.**

# மதுரையின் அழிவு

## கி.பி. முதலாம் நூற்றுண்டில் அன்னியர்களால் மதுரை தீக்கிரையாக்கப் பட்ட பின் தமிழகத்திலும், தமிழர்கள் ஆண்ட இந்தியாவிலும் நிகழ்ந்தவை:

***18-02-1984இல் குருதேவர் மதுரைச் சித்தரடியான் இரா.அழகுமலைப் பிள்ளை அவர்களுக்கு எழுதிய அஞ்சலின் ஒரு பகுதி***

"... பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி மூவேந்தர் ஆட்சியைக் காக்க அருட்படை திரட்டத் திட்டம் தீட்டியும் செயலாக்காததால் தமிழ்மொழி காத்த பாண்டியப் பேரரசு முதலில் தமிழினப் பகைவர்களால் அழிக்கப்பட்டது. இம்மாபெரும் வரலாற்று நிகழ்ச்சியின் ஒரு பகுதிதான் சிலப்பதிகாரக் காப்பியத்தில் விளக்கப்படுகிறது.

அதாவது இமயமலைச் சாரலில் இருந்து பிராகிருத மொழி பேசும் களப்பிறர், தரை வழியாகப் படையெடுத்து வந்து பாண்டியப் பேரரசைத் தாக்கக் காத்திருந்த போது; கங்கை கடலோடு கலக்குமிடத்து இருந்து பாலிமொழி பேசும் கலப்பிறர் கடல் வழியாகப் படையெடுத்து வந்து பாண்டியப் பேரரசைத் தாக்கக் காத்திருந்தனர். அப்பொழுது எதிர்பாராத விதமாகப் பூம்புகார் பெருவணிகரிருவரில் ஒருவர் மகனும் மற்றொருவர் மருமகனுமான கோவலன் கொலையுண்ட நிகழ்ச்சியால் கண்ணகியின் பத்தினித் திறத் தெய்வீக ஆற்றலும் வணிகப் பெருங்குடியினரின் சீற்றமும் மதுரை மாநகரை புயலில் அகப்பட்ட வாழைத் தோட்டமாக்கிற்று. இவ்வாய்ப்பைப் பயன்படுத்தி ஆரியப் படை கடந்த பாண்டியன் நெடுஞ்செழியன் சிறைப்படுத்திக் கொணர்ந்த ஆயிரக்கணக்கான ஆரியர்கள் சூழ்ச்சி செய்து களப்பிறர்களைக் கடல் வழியாகவும், தரை வழியாகவும் பாண்டியப் பேரரசைச் சூறையாடச் செய்தனர்.

தமிழினம் பேணவும், தமிழ்மொழியை வளர்க்கவும், காக்கவும் முற்படும் மதுரை மாநகர் மீண்டும் தமிழ்மொழி வளர்க்கவும், காக்கவும் முற்பட முடியாத அளவு தமிழுணர்வும், பற்றும், பாசமும், ஆற்றலும், ஆர்வமும், நாட்டமும்,

ஈடுபாடும் முழுமையாக அழிக்கப்பட்டன. தமிழ்ப் புலவர்கள் வெட்டியெறியப்பட்டார்கள். தமிழ் சுவடிகளுக்குப் படியெடுப்போர் மாறுகால் மாறுகை வாங்கப் பட்டார்கள். தமிழ்ச் சுவடிகள் எரிக்கப் பட்டன. தமிழ்ச் சங்க மாளிகைகள் தமிழ்ச் சுவடிக் கோட்டங்கள், பட்டிமன்றக் கூடங்கள், தமிழாசிரியர் கோயில்கள் (சமாதுகள்), தமிழ்ப் பள்ளிகள், தமிழ்க் குருகுலங்கள், கூத்து மண்டபங்கள், பாணர் இருக்கைகள், விறலிச் சாலைகள், தமிழ்வாணர் முற்றங்கள், தமிழ் மாணு க்கர் முற்றங்கள், ... என்பன எல்லாம் இடிக்கப்பட்டுக் கழுதையேர் பூட்டி உழப்பட்டன.

இப்படித் தமிழினப் பகைவர்கள் தமிழ்மொழியை வடிவும், வாழ்வும், வளமும், வலிவும், வரலாறும் இல்லாமல் அழித்தொழித்தே தமிழர்களைக் கோழைகளாகவும், அடிமைகளாகவும் ஆக்கினர். தமிழர்களுக்குத் தாய்மொழிப் பற்றோ! பாசமோ! பிடிப்போ! பெருமையோ! ஈடுபாடோ! உரிமையோ! இல்லாமல் செய்தால்தான் தமிழர்களை என்றென்றும் அடிமைகளாகவும் கோழைகளாகவும், போலிகளாகவும், கூலிகளாகவும் வைத்திருக்க முடியுமென்பதை உணர்ந்த ஆரியர்கள்; சித்தர்கள் தமிழ்மொழி போல உருவாக்கிட முயற்சித்து அரைகுறையாகப் படைத்த சமசுக்கிருத மொழியையே தமிழர்கள் உயர்ந்ததாக, பெரியதாக, அரியதாக, கடவுட் தன்மையுடையதாக, எல்லாவிதப் பூசைகளுக்கும் உரியதாக ஏற்கும்படிச் செய்தனர்.

அதாவது, தமிழை உரிமையிழக்கும்படி செய்வதும் தாழ்த்துவதும், பழிப்பதும், புறக்கணிப்பதும், வளராமல் தடுப்பதும், வலிமையடையாமல் செய்வதும்தான் தமிழர்களைக் கோழைகளாக, கூலிகளாக, காலிகளாக, போலிகளாக, வேலியற்றவர்களாக, தாலியற்றவர்களாகச் செய்திடும். அதனால், சேரநாட்டையோ, சோழ நாட்டையோ அடிமைப்படுத்துவதை விடப் பாண்டிய நாட்டை ஆரியமொழியாலும், ஆரியக் கூத்தாலும், ஆரிய மதத்தாலும், ஆரிய அழகாலும், ... என்றென்றும் அடிமைப்படுத்தி, வேறுபடுத்தி, கூறுபடுத்திச் சிதைப்பதிலேயே வட ஆரியர்கள் கண்ணுங் கருத்துமாயிருந்தனர் ....” என்ற குருபாரம்பரிய வாசகம் கண்டுதான் தமிழ் வளர்ச்சிக்காக இலக்கண இலக்கியங்களைப் படியெடுக்கும் பணியும்; தமிழின் கடவுட் தன்மையும், பிற பெருமைகளும் உணரப் படுதற்காக **அருட்பணி விரிவாக்கத் திட்டமும்**, தமிழின விடுதலைக்காகவும், தமிழ்நாட்டுத் தன்னுட்சிக்காகவும் **இந்து மறுமலர்ச்சி இயக்கமும்**, மதத்தால்தான் தமிழர்களை ஒற்றுமைப் படுத்தி இனப்பற்றும், மொழிப்பற்றும், நாட்டுப்பற்றும் பெற்றிடச் செய்ய முடியும் என்பதற்காகக் **கடவுளை வழிபடுவோர் கழகமும்** .... .... ... உருவாக்கினோம்.

ஆனால், ஆரியச் சூழ்ச்சிகள் வென்று தமிழர்களே தமிழ்மொழிப் பகைவர்களாகவும், தமிழினத் துரோகிகளாகவும், தமிழ்நாட்டு விரோதிகளாகவும், ... பெருவாரியாகச் செயல்பட்டிட்டதால் தவத்திலும், தமிழ் வளர்ப்பதிலும், மீனுட்சியம்மன் ஆலயத்தைப் புதுப்பிப்பதிலும் எம்மாலான பணியைச் செய்து ஒதுங்கி ஒளிவில் ஒடுக்கம் பெறுகிறோம்.

1) கண்டப்பக் கோட்டைச் செம்பருத்திப் பிள்ளையும், 2) மிளகாய்ச் சாமி பிள்ளையும், 3) முத்துக்கூற்றத்து அம்பலமும், 4) கம்பண்ண உடையாரும், 5) நாச்சியப்பக் கவுண்டரும், 6) சொக்கேச முதலியாரும், 7) அரியநாத முதலியாரும், 8) தெய்வமலை நாயக்கரும், 9) இராமேசுவரம் கொண்டருளிய சேதுபதியும், 10) இராமநாதபுரத்துத் தேவரும், 11) அழகர்மலைக் கோனூரும், 12) திருச்சி முதலியாரும், 13) சிதம்பரம் கணக்கரும், 14) திருநெல்வேலிப் பிள்ளையும், 15) திருச்செந்தூர் பண்டாரமும், 16) கன்னியாகுமரிப் பட்டரும், 17) திருவானைக்கா தீட்சதரும், 18) மாயவரம் தேசிகரும், 19) கும்பகோணம் ஓதுவாரும், 20) தஞ்சாவூர் மேளக்காரரும், 21) முசிறிப் பிள்ளையும், 22) அவினுசிப் பிள்ளையும் 23) குமாரபாளையம் செட்டியாரும், 24) திருப்பத்தூர் சேர்வையும், 25) கடலூர் படையாச்சியும், 26) ஆரணி முதலியாரும், 27) வேலூர் அப்பாத்துரைப் பிள்ளையும் ... குறிப்பிடும்படியான பணிகளைத் துணையாக எமக்குச் செய்தார்கள்.

இருந்தாலும் எம்மிடம் உருவானவர்களில் மந்திரவாதிகளும், சூன்யக்காரர்களும், அரைகுறைச்

சோதிடர்களும், வெம்பிப் பழுத்த பூசாறிகளும், முழுமை பெருத சிற்பிகளுமே அதிகம், அதிகம், அதிகம், .... யாமும் தோற்றே, தமிழினம் காக்கவியலாமல் ஒடுங்கி நிறைகிறோம். ... "

என்று கண்டப்பக் கோட்டைச் சித்தர் ஏளனம்பட்டியார் உ.இராமசாமிப்பிள்ளை எனும் கருவூறார் தமது கடைசிக் காலத்தில் எழுதியிருக்கிறார்.

**குறிப்பு**:- இவர் குறிப்பிடும் குருபாரம்பரிய வாசகங்களை அடிப்படையாகக் கொண்டே எமது தந்தை காக்காவழியன் பண்ணையாடி சித்தர் காக்கையர் ம.பழனிச்சாமி பிள்ளை அவர்கள் 'The Fall of Madurai', 'The Destiny of the Two Great Cities', 'The Rise and Fall of the Tamils', 'The History behind the Great Epic Chilappathikaaram', 'The contributions to the World History by the Siddhars', 'The Secrets of the Aryans' ever success', 'The Downfall of the Induism', 'The Aryans' capture of Induism', 'The Sources of the Ever-slavery of the Tamils' ... என்ற ஆங்கில நூல்களை எழுதினார். யாம், இவற்றை அடிப்படையாகக் கொண்டே 'மதுரை மாநகர் எரிகிறது', 'தமிழின வீழ்ச்சி', 'தமிழினத் தாழ்ச்சியும் மீட்சியும்', 'The Fall and Rise of the Tamils', 'ஆரிய வெற்றி', 'இந்துமதம் சிதைந்தது', 'தமிழினத்தின் மீளா அடிமைநிலை', 'பாண்டியப் பேரரசின் வீழ்ச்சி', 'தமிழினப் பேரழிவு' 'சங்க இலக்கியங்கள் பிறந்தன', 'தமிழின விழிச்சி தமிழின் செழுச்சி', 'தமிழின் வீழ்ச்சி தமிழின தோல்வி', 'இந்துமத மறுமலர்ச்சி', 'தமிழ் இந்தியா', 'தமிழரும் ஆரியரும்' ... என்ற நாடகங்களை எழுதினோம். ... ... ...]

***//இதன் மூலநகல் எவருடைய கையெழுத்து என்று அறிய முடியவில்லை.//***

# என்றைக்குமுரிய அரசபாரம்பரியம்

**தமிழ்மொழி வழிக் கல்வி இல்லாததால் தமிழர்கள் தங்களுடைய தாய்மொழியையும், தாய்மொழியில் உள்ள அரிய செல்வங்களையும் மறந்து, துறந்து, 'தமிழில் என்ன இருக்கின்றது?' என்று கேட்கும் மடமைநிலைக்குத் தள்ளப் பட்டிடுகின்றார்கள். அத்துடன் அன்னிய மொழியில் கல்வி கற்பதால் அன்னிய நாகரிகத்திற்கும், அன்னிய வாழ்வியலுக்கும் அடிமையாகி அன்னியராகவே வாழும் இழிநிலைக்கு ஆளாகி விட்டனர். இது கி.பி.7ஆம் நூற்றாண்டு முதலே இருந்த நிலை என்பதை இந்தக் கட்டுரை விளக்கிடுகின்றது. இந்தக் கட்டுரையில் உள்ள வாசகங்கள் 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி, ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூறார் தாம் வளர்த்த முதலாம் விசயாலயச் சோழ மன்னனுக்கு (கி.பி. 785 - கி.பி. 893) வழங்கிய செயல்திட்ட அறிவுரைகள்.**

(1) தமிழினத்துக்கென்று உரிமையான அரசு அமைவது எளிதல்ல என்ற உண்மையை உள்ளங்கை நெல்லிக்கனியென விளக்குவதே நமது கல்வியின் நிலை. வடஆரியக் குருகுலங்களில் சமசுக்கிருதமும்; புத்த மடங்களில் பாலியும், பிராகிருதமும்; சமணப் பள்ளிகளில் தேவநாகரியும், சமசுக்கிருதமும்; வளர்க்கப் படுகின்றன. ஆனால், தமிழ்; எங்கோ சில புலவர்களின் வீட்டு ஓட்டுத் திண்ணையில்தான் வளர்க்கப் படுகின்றன. எனவே, கல்வி கற்ற மேதைகளில் தமிழுணர்வே இல்லாத அரசியல் நோக்கும் போக்கும்தானே இருக்க முடியும். அதாவது, பட்டம், பதவி, புகழ், கூலி, வெகுமதி, பரிசு .... முதலியவைகளுக்காக அனைத்தையும் அன்னியர்க்கு அடகு வைக்கவும், அடிமைப் படுத்தவும், காட்டிக் கொடுக்கவும் தயாராக இருக்கும் இளைய தலைமுறைதானே கல்வி நிலையங்களில் தயாரிக்கப் படுகின்றன. இதைத் தடுத்துப் பதினெட்டு வயது கடந்தவரே பிறமொழி கற்கலாமென்ற விதியையும்; தமிழ் தவிர வேறு

மொழிகளில் கல்வி கற்பிக்கக் கூடாது என்ற கடுமையான தடையும் விதிக்கப் பட்டால்தான் தமிழினக் குழந்தைகள் உண்மைத் தமிழர்களாக வளர்வார்கள்; தமிழகத்திலுள்ள அன்னியர்கள் தமிழர்களோடு உண்மையான உறவு பூண்டு தமிழ்மொழியால் தங்களின் குழந்தைகளைத் தமிழினக் காவலர்களாக்கிடுவர். எனவே, தமிழ்மொழி வழி கல்வி கற்க விரும்பாத தமிழர்களும் அன்னியர்களும் தங்களின் வாரிசுகளோடு வெளியேறட்டும். இந்த நோக்கிலும் போக்கிலுமே தமிழினப் பேரரசு உருவாக வேண்டும் விசயாலயா!

(2) நாட்டாட்சியில் உள்ளவர்களும் வணிகர்களும் கூத்தாடிகளும் பிற கலை வல்லார்களும் பேராசை கொண்டு அலைவதால் மொழியுணர்வோ, இனப்பற்றோ, நாட்டுரிமைப் பெருமிதமோ.... ஊசிமுனையளவு கூட இல்லாதவர்களாகவே இருக்கிறார்கள். இவர்கள் போட்டி போட்டுக் கொண்டு கூலிக்காக அனைத்தையும் அன்னியர்க்கு அடிமைப் படுத்தித் தமிழினத் துரோகிகளாகவும் விரோதிகளாகவுமே வாழ்ந்து பழகி விட்டார்கள். இவர்களைத் திருத்துவது எப்போது? எப்படி? இளந் தலைமுறைகளாவது அன்னியர்களிடம் கூலிகளாக, கங்காணிகளாக..... மாறுவதைத் தடுக்க வேண்டும். அதற்கு, அன்னியரின் வாசனையே தமிழகத்தில் இல்லாமல் அடித்துச் செல்லும் காட்டாற்று வெள்ளமாகக் குருதி வெள்ளம் ஓடித்தான் தீர வேண்டும். இராமாயணமும், பாரதமும் விளக்கும் போர்வழிதான் அறவழி; அன்னியர்கள் அழிக்கப் பட்டிட்டால் துரோகிகள் நலிந்தொழிவர். இத்தத்துவத்தை உரத்தோடு செயலாக்கினால்தான் அமையப் போகும் அருளாட்சி ஆயிரமாண்டாவது வாழும் விசயாலயா.

(3) இந்துமதம் வட ஆரியரின் வேதமாகத் திரிக்கப் பட்டுவிட்ட தில்லுமுல்லைகளைத் தெளிவாக விளக்கிப் பதினெண்சித்தர்களின் உண்மையான இந்துமதத்தைப் பொதுமக்கள் தெரிந்தும் புரிந்தும் அன்றாடம் செயலாக்கி வாழுமாறு செய்ய வேண்டும். தமிழினம் மதத் துறையில் அடிமையாக, கூலியாக, கங்காணியாக, ஏமாளியாக, கோமாளியாகப் பழக்கப் படுத்திடப் படுவதால்தான்; அரசியலில் அன்னியரின் ஆதிக்கம் வலிவோடும், வளத்தோடும் வளருகிறது. அதனால், புதிய வழிபாட்டு நிலையங்களைக் கருவறைக் கோபுர உயர்ச்சியோடு உருவாக்கினால்தான் உண்மையான இந்துமத மலர்ச்சிக்கும் செழிச்சிக்கும் வளர்ச்சிக்கும் வழிபிறக்கும். உண்மையான இந்துமத மறுவாழ்வே தமிழின மறுவாழ்வு, உரிமை மிகு அரசியல் வாழ்வு - இத்தத்துவமே அருளாட்சியின் உயிர்நாடி விசயாலயா.

**//இதன் மூலநகல்: குருதேவரின் கையெழுத்தில் கிடைத்திட்ட இருபக்கக் கட்டுரை//**

## காலக் கணக்கீடு

பதினெண்சித்தர்களின் பெருமுயற்சியால் இந்துமதத்தின் மூலம் மனிதர்கள் தோன்றித் தோன்றி வாழப்போகும் காலம் நான்கு உகங்கள் (நான்கு யுகங்கள்).

| | |
|---|---|
| முதல் உகம் 'கிரேதாஉகம்' | 17,28,080 |
| இரண்டாவது உகம் 'திரேதாஉகம்' | 12,90,000 |
| மூன்றாவது உகம் 'துவாபரஉகம்' | 08,64,000 |
| நான்காவது உகம் 'கலிஉகம்' | 04,32,000 |
| | ------------------- |
| மனித வரலாற்றுக் காலம் = மனிதக் காலம் | 43,14,080 |
| வரலாற்றுக்கு முந்திய மணிசக் காலம் | 04,85,920 |
| | ------------------ |
| மனித உயிரினத்துக்குரிய காலம் | 48,00,000 |

நாற்பத்தெட்டு நூறாயிரம் ஆண்டுக்காலம் மனித உயிரினம் இம்மண்ணுலகில் வாழும்.

**-- திருமாளிகைத் தேவர் அருளிய குருபாரம்பரிய வாசகம்**

